# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 42/2020 | Date : 10.07.2026 | RW 1 |
|---|---|---|
| Name: வெங்கடேஷ் | த/பெ. பச்சமுத்து | |

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எத்தனை வருடங்களாக இருசக்கர வாகனம் ஓட்டிவருகிறேன் என்றால் 14 வருடங்களாக ஓட்டி வருகிறேன். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் கொரோனா சமயம் என்பதால் இன்சூரன்ஸ் எடுக்க முடியவில்லை. வழக்கு சம்மந்தமாக என் மீதுதான் நங்கவள்ளி காவல் நிலையத்தில் வழக்கு பதிவுசெய்தார்கள் என்றால் சரிதான். அதன்பேரில் மேட்டூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த வழககில் நான் குற்றவாளி என தீர்ப்பு ஆகி நான் அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அந்த விபத்து சமயத்தில் குடிபோதையில் வாகனம் ஓட்டினேன் என்றால் சரியல்ல. நான்தான் குடிபோதையில் அதிவேகமாகவும், அஜாக்ரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்தினால் மனுதாரர் நிரந்தர ஊனமாகியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளது என்றும் ஒரு காலும் ஒரு கையும் ஊனமாகியுள்ளது என்றால் சரியல்ல. நான் மெதுவாக வாகனத்தை ஓட்டியிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. நான் மெதுவாகதான் சென்றேன். இந்த விபத்தில் எனக்கு காயமேற்பட்டதா என்றால் எனக்கும் காயம் ஏற்பட்டது. நான் சொல்வதுபோல் எனக்கு அடிப்பட்டு சிகிச்சை எடுத்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும் எனக்கு எந்த அடியும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் மேற்படி வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லாமலும் வாகனத்தை நானே ஒட்டி சென்றதால் நான்தான் மனுதாரருக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/—வெங்கடேஷ்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஓம்/—R.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.